www.ecourtsindia.com

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II TIRUPPUR.
**CC No. 571/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of Witness for | | | Prosecution | : | PW- 2 |
| | | | Defence | : | |
| Name | : | சூரியபிரகாஷ் | Court | : | JM-2 |
| Father's/ Husband's Name | : | தண்டியப்பன் | Occupation | | |
| village | : | | Age | : | |
| Taluk | : | | | : | |

Solemnly affirmed in accordance with the provisions of act X of 1873 of the day of
**எதிரி ஆஜர்.**

**முதல்விசாரணை** **நாள் – 14.05.2025**

1. நான் தற்போது KVR நகரில் குடியிருந்து வருகிறேன். பிரிண்டிங் வேலை பார்த்து வருகிறேன். இவ்வழக்கு வாகன விபத்தில் இறந்த தண்டியப்பன் எனது அப்பா ஆவார். எனது அப்பா மணிகண்டன் என்பவரிடம் லோடு மேனாக வேலை பார்த்து வந்தார். கடந்த 03.09.2023 ம் தேதி காலை 07.30 மணியளவில் வழக்கம் போல வேலைக்கு சென்றார். பின்பு 08.10 மணியளவில் எனது அப்பாவுடன் வேலை பார்க்கும் வாசிமலை என்பவர் எனக்கு போன் செய்து ஈஸ்வரன், வாசிமலை, பிச்சை மற்றும் எனது அப்பா ஆகியோர் TN 51 A 7008 என்ற டிராக்டர் அதனுடன் இணைந்த TN 63 H 3378 என்ற டிரைலரின் மேற்படி டிராக்டரை ஈஸ்வரன் ஓட்ட ஊஷா தியேட்டர் அருகே மண் லோடு எடுப்பதற்காக சென்றபோது உஷா தியேட்டர் அருகே கிழக்காக திருப்பும்போது நிலை தடுமாறி எனது அப்பா கீழே விழுந்துவிட்டார். டிராக்டர் பின்னால் இருந்த டிரைலர் எனது அப்பாவின் முதுகில் ஏறி அவருக்கு முதுகிலும் உயிர் நாடியிலும் காயம் ஏற்பட்டதாக எனக்கு தகவல் தெரிவித்தார். நான் எனது அம்மாவுடன் திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். காலை 10.15 மணிக்கு எனது அப்பா இறந்துவிட்டார். எனது அம்மாவிற்கு எழுத படிக்க தெரியாததால் நான் புகார் எழுதி கொடுத்தேன். சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சப.ஆ.1 புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது. **கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பிரேத விசாரணையின் போது நான்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTI1A0078562024/truecopy/order-2.pdf

உடனிருந்து எனது அப்பாவின் பிரேதத்தை அடையாளம் காட்டினேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

இந்த சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இழப்பீடு தொகை பெறுவதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

NADIA FATHIMA
Digitally signed by NADIA FATHIMA
Date: 2025.05.14 15:53:49 +0530

Judicial Magistrate No.II,
Tiruppur.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTI1A0078562024/truecopy/order-2.pdf

www.ecourtsindia.com